1979 மார்ச் 24]

யாற்றுவது உண்மை. இந்த அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்து போதிய தாசில்தார்களை நியமிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம். டெலிபோன் வசதி பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்போது இருக்கின்ற நிலைமை என்னவென்றால் அங்கே பணியாற்றுவதற்கே போதிய ஆட்கள் இல்லை என்பது. ஆகவே முதலிலே தேவையான ஆட்களைப் போடுவோம். அதற்குப் பிறகு மற்ற வசதிகளைச் செய்து கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன மாணவர் விடுதிக் கட்டடங்கள்.

குறுகிய கால வினா எண் 23.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977ஆம் ஆண்டு ஜூலை முதல் எத்தனை அரிசன மாணவர் விடுதிக் கட்டடங்கள் கட்ட ஆணையிட்டுள்ளது ? ஊர் வாரியாக?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1977ஆம் ஆண்டு ஜூலைக்குப் பின்னர் பின்வரும் ஊர்களில் புதிதாக நான்கு அரிசன நல மாணவர் விடுதிக் கட்டடங்கள் கட்ட ஆணையிடப் பட்டுள்ளன :

1. முசிறி (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).	1
2. ஆலங்குடி (புதுக்கோட்டை) ..	1
3. திருக்கோட்டியூர் (இராமநாதபுரம்) ..	1
4. மல்லான் கிணறு (இராமநாதபுரம்) ..	1
	4

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதிகள் பெரும்பாலும், தனிப்பட்டவர்களின் வாடகை கட்டடங்களில்தான் நடைபெற்று வருகிறது. இதனால் தனிப்பட்டவர்களுக்கு வாடகை போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே அரசுக்கு இந்த வாடகை கிடைக்கிற அளவில் அரசே இதை பெரிய அளவில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, சட்டியில் இருந்தால் தான் அகப்பையில் வரும். சட்டியில் இருப்பதை வைத்துக்கொண்டு சில விடுதிகளை இந்தத் துறை கட்டிக் கொண்டிருக்கிறது. 1977-க்குப் பிறகு நான்கு விடுதிகளை கட்டுவதற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. இனிமேல் படிப்படியாக இவற்றை கட்டுவதற்கு அரசு ஆலோசித்துவருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சாதியற்ற சமுதாயம் அமைப்போம் என்று எல்லா அரசியல்வாதிகளும் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இப்போதும் அரிசன மாணவர் விடுதிகள் என்று தான் இருக்கிறது. ஆகவே இதில் அரிசன என்ற சொல்லை எடுத்துவிட்டு மாணவர் விடுதி என்று மட்டும் வைத்துக் கொள்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஜாதியற்ற சமுதாயம் அமைப்போம் என்று எல்லா அரசியல் வாதிகளும் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று உறுப்பினர் கூறினார் இனியும் பேசிக்கொண்டே இருப்போம். இப்போது அரிசன மாணவர் விடுதி என்பதை அரசினர் மாணவர் விடுதி என்று அரசு மாற்றியிருக்கிறது.

கொடைக்கானல் மலைப்பகுதியில் அலுமினிய பாக்சைட்.

*520 வினா—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொடைக்கானல் மலைப்பகுதியில் அலுமினியம் பாக்சைட் கனிகள் இருப்பது ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் அவைகளை பயன்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 7—10—1968 தேதியிட்ட தொழில்துறை அரசு ஆணை எண் 3459-ல், ‘‘மால்கோ’’ என்று அழைக்கப்படும் மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி நிறுவனத்திற்கு கொடைக்கானல் பகுதியில் 960 ஏக்கர்கள் பரப்பில் முப்பது ஆண்டுகளுக்கு பாக்சைட் வெட்டியெடுத்துக்கொள்ள சுரங்கக் குத்தகை வழங்கப் பட்டுள்ளது.